I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W. 1(L.W.1)
SC.NO.75/2018

| | | |
|---|---|---|
| Name | : | Thiru. Saravanan |
| Father Name | : | |
| Occupation | : | S.P. Villupuram |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 21.08.2025

அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி ஆஜர்.

**விசாரணை தொடங்கிய நேரம்: 12.10 p.m**

**1 வது எதிரி சார்பில் குறுக்கு விசாரணை–**

சம்பவம் எந்த தேதியில் நடந்தது என்றால் 21.03.2006 அன்று நடந்தது. எத்தனை மணிக்கு என்றால் மாலை சுமார் 06.00 மணிக்கு இருக்கும். நான் எங்கிருந்து அந்த சம்பவ இடத்திற்கு போனேன் என்றால் விரிஞ்சிபுரம் காவல் நிலையத்திலிருந்து சம்பவ இடத்திற்கு சென்றேன். விரிஞ்சிபுரத்திலிருந்து மாலை 03.30 முதல் 04.00 மணியளவில் சம்பவ இடம் சென்றோம். எந்த வாகனம் என்றால் நான் DSP வாகனத்தில் சம்பவ இடத்திற்கு 2 கிமீ முன்பு வரை வாகனத்தில் சென்றோம்.

நாங்கள் மொத்தம் 15, 16 போலீசார் சென்றோம். நாங்கள் சென்ற வாகனத்தின் எண் தெரியாது. அந்த வாகனத்தை யார் ஓட்டி வந்தார்கள் என்றால் தெரியாது. விரிஞ்சிபுரம் காவல் நிலையத்திலிருந்து சம்பவ இடம் சுமார் 10 கிமீ க்கு மேல் இருக்கும். நான் வாகனத்தை நிறுத்திவிட்டு சுமார் 2 கிமீ நடந்து சென்றோம். நாங்கள் வாகனத்தை நிறுத்திய இடத்தில் எந்த வீடுகளும் இல்லை. எந்த பகுதியில் வாகனத்தை நிறுத்தினோம் என்றால் கைலாச மலை அடிவாரத்திற்கு முன்னால் நிறுத்தினோம். அந்த பகுதி எந்த காவல் நிலையத்திற்கு உட்பட்டது என்றால் சம்பவ நடந்ததாக சொல்லப்படும் எந்த

காவல் நிலையத்திற்குட்பட்டது என்றால் தெரியாது. அந்த பகுதி மலை பகுதி என்றால் சரிதான். அந்த மலை பகுதி எந்த வன சரகத்திற்கு உட்பட்டது என்றால் நினைவில்லை.

அந்த பகுதி எந்த கிராம நிர்வாக அலுவலருக்கு உட்பட்டது என்றால் நினைவில்லை. அதன் பிறகாவது எந்த வன சரகத்திற்குட்பட்டது என்றும் அந்த பகுதி எந்த கிராம நிர்வாக அலுவலகத்திற்குட்பட்டது என்றும் விசாரணை செய்து தெரிந்து கொண்டேன். தற்போது நினைவில்லை. நான் அங்கு சென்ற போது எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் குடிப்பதற்காக மொத்தம் 7 பேர் இருந்தார்கள். அதில் யார் சாராயம் குடிக்க வரார்கள் யார் விற்க வரார்கள் என்று தெரியாது என்றால் சரிதான், என்னை பார்த்தவுடன் ஓடிவிட்டார்கள், எனவே யார் சாராயம் விற்றார்கள் யார் குடிக்க வந்தார்கள் என்று முதலில் தெரியாது.

நான் போகும்போது சீருடையில் சென்றேன். சிலர் சாதாரண உடையிலும் வந்தார்கள். நாங்கள் போவதற்கு முன்பு அந்த ஊர் தலைவருக்கோ அல்லது முக்கியஸ்தருக்கோ தகவல் தெரிவித்தேனா என்றால் தெரிவிக்கவில்லை ஏன் என்றால் ஊர் தலைவருக்கு தெரியப்படுத்தினால் அவர்களுக்கு உயிர் பாதிப்பு ஏற்படும் என்று தெரிவிக்கவில்லை.

அவர்கள் துப்பாக்கியில் சுட்டதாக சொல்லப்படும் நிலையில் அது எந்த துப்பாக்கி என்றால் நாட்டு துப்பாக்கி. வேறு எதாவது அடையாளம் உள்ளதா, தெரியுமா என்றால் இரண்டு துப்பாக்கியும் SBBL துப்பாக்கி, ஒன்று 3 முதல் 4 அடி வரை நீளம் இருக்கும், ஒன்று மட்டும் அரை அடி சிறியதாக இருக்கும். இந்த இரண்டு துப்பாக்கிகளில் யார் எந்த துப்பாக்கியில் சுட்டார்கள் என்றால் துப்பாக்கி காட்டினால் சொல்ல முடியும் என்று சாட்சி சொல்கிறார். (துப்பாக்கிகள் காண்பிக்கப்பட்டது.) அதை பார்த்து சாட்சி சொல்கிறார்–மணி என்பவர் கையாண்ட துப்பாக்கியானது நீளம் குறைவாக உள்ள துப்பாக்கியாகும்.அதை ஏற்கனவே சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

துப்பாக்கி அவருடையது தான் என்பதற்கான ஆதாரம் எதாவது உள்ளதா

என்றால் ஆதாரம் மற்றும் உரிமமோ இல்லை, ஆனால் அவர் கையில் வைத்திருந்தார். கள்ளத்துப்பாக்கி என்பதால் அது யாரிடம் வேண்டுமானாலும் இருக்கலாம் என்றால் சரியல்ல, அது அவர்தான் வைத்திருந்தார். அது அவருடையதுதான் என்று காட்டுவதற்கு ஆதாரம் இல்லை என்றால் கள்ளத்துப்பாக்கி என்பதால் ஆதாரம் இருக்காது. அவர் துப்பாக்கி வைத்து கொண்டி இருந்த புகைப்படத்தை எதுவும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் அவரிடம் துப்பாக்கி கைப்பற்றும்போது சாட்சிகள் முன்னிலையில் புகைப்படம் எதுவும் எடுத்தோமா என்றால் இல்லை. சாட்சி சொல்கிறார் அவர் துப்பாக்கியால் சுட்டதாலும் அனைவரும் உயிர் பயத்தில் இருந்ததாலும் உடனிருந்த காவலரை துப்பாக்கியால் சுட்டுதாலும், அது காட்டு பகுதி என்பதாலும் போட்டோ எடுக்கவில்லை மற்றும் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றவும் இல்லை. அந்த துப்பாக்கியை நாங்களே எடுத்து வந்துவிட்டோம் என்றால் சரிதான். அங்கு சாராயம் பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படுவது 2 பேரல் ஆகும். அந்த சாராயத்தை கைப்பற்றும்போதாவது எந்த சாட்சியிடம் கையெழுத்து பெற்றோமா என்றால் இல்லை, சாட்சி சொல்கிறார் காயம்பட்டவர்களை உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்து சென்றதால் சாட்சியிடம் கையெழுத்து பெறவில்லை.

அந்த இடத்தில் ரூ.150 யை கைப்பற்றினோம். அந்த பணத்தை கைப்பற்றும்போதும் கூட சாட்சி கையெழுத்து பெறவில்லை என்றால் சரிதான். மேலே கூறிய காரணத்தினால் கையெழுத்து பெறவில்லை. அந்த ரூ.150 எந்த வகையான தாள் என்றால் நினைவில்லை. பணம் ரூ.150 என்பது சாதாரணமாக யாரிடம் வேண்டுமானாலும் இருக்கலாம் என்றால் சரிதான், ஆனால் இந்த பணம் சாராயம் விற்ற பணம் தான். அந்த பணம் சாரயம் விற்ற பணம் தான் என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் எதிரியே கூறினார்.

மாலை 06.00 மணி என்பது இருட்டாக நேரம் என்றால் வெளிச்சம் இருந்தது. நான் சொன்னது போல் எதிரி சாராயம் விற்கவில்லை என்றால்

சரியல்ல. அவர்கள் மலைவாழ் மக்கள் என்றால் சரிதான். அவர் சாராயம் விற்கவில்லை என்றாலும் எந்த துப்பாக்கியும் வைத்து கொண்டிருக்கவில்லை என்றாலும் காட்டு பகுதியில் ஆடு மேய்த்து கொண்டிருந்தார்கள் என்றாலும் நாங்கள் இருட்டில் தெரியாமல் ஆஜர் 1வது எதிரியை தவறுதலாக சுட்டுவிட்டோம் என்றாலும் அந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக அவர்கள் எங்களை நோக்கி சுட்டதாகவும் தற்காத்துக்கொள்ள நாங்கள் சுட்டதாகவும் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. சாட்சி சொல்கிறார் அவர்கள் துப்பாக்கியால் வானத்தை நோக்கி சுட்டுவிட்டு கள்ள சாராயம் விற்பனையை தொடங்குவார்கள். நான் மேற்சொன்ன தகவலை புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

அந்த கைப்பற்றப்பட்ட சாராயத்தை நாங்கள் உடன் எடுத்து வந்தோமா என்றால் எடுத்து வந்தோம். அந்த 2 பேரல் சாராயத்தை என் உடன் வந்த டீம், திரு. புகழ், Haridass மற்றும் 2, 3 காவலர்கள் எடுத்து வந்தார்கள். அனைத்தையும் வண்டியில் ஏற்றிவிட்டு நாங்கள் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு வந்த காயம்பட்டவரை சிகிச்சைக்கு சேர்த்துவிட்டு நான் நேராக பாகாயம் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். புகார் எத்தனை பக்கம் எழுதினேன் என்றால் சுமார் 3, 4 பக்கங்கள் இருக்கும். அந்த புகாரில் முன் பகுதியில் தேதி குறிப்பிட்டு எழுதினேனா என்றால் நினைவில்லை. நான் என் உயர் அதிகாரியின் அழுத்ததினால் ரெய்டு போனோம் என்றாலும் ஆடு மேய்த்து கொண்டிருந்து நபரை சுட்டோம் என்றாலும் அந்த நாட்டு துப்பாக்கியும் நாங்களே தயார் செய்து வைத்தது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் உள்ள சான்று பொருட்கள் மற்றும் சான்று ஆவணங்கள் அனைத்தும் எங்களால் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளிடமிருந்து எந்தவித ஒப்புதல் வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தனிப்பட்ட சாட்சி எதாவது சேர்த்துள்ளேனா என்றால்

புலன் விசாரணை அதிகாரிக்கு தான் தெரியும்.

**2 வது எதிரி சார்பில் குறுக்கு விசாரணை**

நான் எந்த தேதியில் நடவடிக்கையை தொடங்கினேன் என்றால் 21.03.2006. நான் என்னுடைய அலுவலகத்திலிருந்து நேராக பாகாயம் சென்று புகார் மனு கொடுத்துவிட்டு அங்கிருந்து விரிஞ்சிபுரம் காவல் நிலையம் சென்று அங்கு காவலர்களுக்கு முறையான பயிற்சி கொடுத்து எதிரிகளை பிடிக்க சென்றோம் என்றால் சரியல்ல. சாட்சி சொல்கிறார் பகல் 03.00 மணிக்கு தகவல் கிடைத்தவுடன் நேராக விரிஞ்சிபுரம் காவல் நிலையத்திற்கு சென்று அங்கு ஆயுதங்களை எடுத்து கொண்டு காவலர்களுக்கு பாதுகாப்பு அறிவுறுத்தினோம். அவர்களுக்கு எச்சரிக்கை செய்து நாங்கள் ரெய்டுக்கு போனோம். அந்த இடத்தில் எதிரி என்னை நோக்கி சுட வந்ததால் நாங்கள் திருப்பி சுட்டோம் என்று சொல்லியுள்ள நிலையில் இரு நபர் எதிர் எதிரே சுடும்போது எங்கு படும் என்றால் எங்கு aim செய்கிறோமா அங்கு படும். எதிரியின் எந்த காலில் தோட்டா பாய்ந்தது என்றால் எந்த கால் என்று நினைவில்லை, ஆனால் முழுங்காலில் சுட்டேன்.

எதிரியை நேருக்கு நேராக சுட்டால் நேருக்கு நேர் பாயும் என்றால் சரியல்ல, அந்த இடம் மேடு பள்ளம் மற்றும் பாறைகள் இருக்கும் இடம். அதனால் நாங்கள் ஒரு பக்கமாக ஒதுங்கி தான் சுட முடியும். நான் சொல்வது போல் பார்த்தால் முன் காலில் தான் தோட்டா பாய்ந்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. நான் பாகாயம் காவல் நிலையத்தில் புகார் சுமார் 08.30 மணிக்கு கொடுத்தேன். நான் சாராய வேட்டைக்கு போனபோது அந்த ஊருக்கு திருவிழா என்று எனக்கு தெரியாது, சம்பவம் நடந்தது காட்டு பகுதி அங்கு ஊர் எதுவும் கிடையாது. இந்த வழக்கில் எதிரிக்கு வழக்கிற்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றாலும் உயர் அதிகாரியின் அழுத்ததால் எதிரி சடையனை கைது செய்தோம் என்றாலும் சரியல்ல.

**4 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் 4 வது எதிரி கல் எறிந்ததாக தான் வழக்கு என்றால் சரிதான். அந்த கல்லை நாங்கள் கைப்பற்றவில்லை என்றால் சரிதான்.ஏன் என்றால் அதை மலையிலிருந்து எறிந்தார். அந்த கல்லின் அளவு என்ன என்றால் கையில் பிடிக்கும் அளிவிற்கான அளவு தான் இருக்கும். அப்படி ஒரு சம்பவம் நடக்கவில்லை என்றாலும் எறிந்திருந்தால் அந்த கல்லை கைப்பற்றியுருப்போம் என்றாலும் சரியல்ல. கல் எறிந்ததாக சொல்லப்படும் நிலையில் யாருக்காவது காயம் பட்டதா என்றால் இல்லை. அவ்வாறு கல் எறிந்திருந்தால் காயம்பட்டிருக்கும் என்றாலும் இந்த வழக்கில் காயம்பட்டதாக யாரையும் சொல்லவில்லை என்றால் நினைவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் அவ்வாறு காயம் பட்டிருந்தால் அப்படி ஒரு நபர் இருந்திருந்தால் புகாரில் சொல்லியிருப்போம் என்றால் சரியல்ல. எங்களுக்கு நான்காவதாக ஒரு நபர் தேவைப்படுவதால் வீட்டில் இருந்த நபரை பிடித்து வந்து வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரி சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் அவர் இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றாலும் நாங்கள் பொய்யாக அவர் மீது புகார் கொடுத்துள்ளோம் என்றாலும் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம்:01.00 p.m**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

(Sd/Tmt.G.Santhi)
முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்